முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 19 திகதி முதல்

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 26 திகதி வரை

(02.04.2023 ஞாயிறு முதல் 09.04.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. மன்னனும் மக்களும் தயவுகொண்டிட
மாதர்மமாக இயற்கை அருளிட
எந்நாளும் செல்வவளம் குன்றாத
இறைபலம் கொண்ட இந்தியா தமிழகமே
2. அகமதாய் இந்த கலியுகத்தில்
அனைத்தும் மாற்றம் ஆகி
பகைவஞ்சம் பதுக்கல் பகட்டல்
பண்பிலா நிலைக்குசென்ற சூழலை எண்ணி
3. எண்ணியே ஏனிந்த அவலமென
இயல்புநிலை எப்போ மாறுமென
மண்ணுலகில் அரங்கஞானி கேட்க
மகரிஷி அகத்தியன் யானும் வாரஆசியாக
4. ஆகவே இந்தியா தமிழகத்தில்
அறிவிப்பேன் சுபகிருது சேல்திங்கள்
வகைபட மூவாறோர் திகதிமேல் இருபானாற் திகதிவரை
வரை நடக்கும் வாரநிகழ்வாக
5. ஆகவே வருங்கால பலனாக
அருளுவேன் ஆபத்து ஆபத்து
மிகையான வெப்பம் தலைதூக்கி
மக்களை மாற்று தீய சக்தியாக
6. ஆகவே வதைசெய்யும் நிலையிருக்க
அனைவரும் வழிபாட்டை பெருக்கி
மிகையான அன்னதான சேவை
மேலாக விரிவுபட செய்ய வேண்டும்
7. வேண்டி வந்து ஆளுமைகளும்
விழா எடுத்து இயற்கையை போற்ற
உண்டான பெரும் ஆபத்து
உயிர்பலி மிகாது அகன்றோடும்
8. அகன்றோட கருணை வடிவாக
ஆளுமை அதிகார பலங்கள்
வகைபட மக்களை நோக்கியும்
வாஞ்சையோடு வாழ்வாதாரம் காக்க

9. காக்க உண்டான திட்டங்களாக
கட்டளையாக நிறைவேற்றி வருக
தேக்கமின்றி தேச வளர்ச்சியும்
தெய்வபலமாக இந்தியா தமிழகம்

10. தமிழகம் வறுமைநிலை கடந்து
தக்க பொருளாதார மேம்பாடு
நேமமுடன் இயற்கை ஆசிபட அடையும்
நிலமதனில் பேரிடர்அணுகா மீளும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 19ம் நாள் 02.04.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் 26ம் நாள் 09.04.2023 ஞாயிற்றுக்கிழமை வரை நிகழவிருக்கும் நிகழ்வுகள் :

தயவு உள்ளம் மிக்க மக்களையும் மன்னனையும் மாதர்ம பலமும், இயற்கை வளமும் செல்வ செழிப்பும் கடவுள் பலத்தையும் உடைய இந்தியா தமிழகமே ஆனால் இன்று இந்த மாயை சூழ் கலியுகத்திலே எல்லாம் மாற்றமாகி பகையாகவும், பதுக்கல் செய்தும், வஞ்சம் மிகுந்தும் பகட்டான பொய் தோற்றமும் கொண்டு பண்பில்லாத நிலைக்கு மாறி விட்டதப்பா இந்த சூழ்நிலைகளை எண்ணி இந்திய தேசத்திற்கு ஏன் இப்படிப்பட்ட அவலநிலை? இயல்பான நிலைக்கு இந்தியா தமிழகம் எப்போது வரும்? என்றே அவதார ஞானி ஆறுமுக அரங்க மகா தேசிகனார் அகத்திய மகரிஷி எம்மிடம் கேட்க யானும் சுபகிருது வருடம் பங்குனி மாதம் 19ம் நாள் 02.04.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் 26ம் நாள் 09.04.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இந்திய மக்களே சூரியனின் வெப்ப கதிர் வீச்சால் இந்திய தேசம் முழுதும் ஆபத்தான சூழல் உருவாக வாய்ப்புள்ளது.

இந்திய தேச மக்கள் வர இருக்கும் கொடுமையான வெப்பம் மிகுந்த சூழல் உருவாகாமல் இருக்க அவரவரும் கருணையே வடிவான கடவுளை முருகப்பெருமானை நோக்கி வழிபாடுகளை செய்வதுடன், துன்பம் தீர அன்னதானங்களையும் தாராளமாய் செய்து வர வேண்டும்.

நாட்டை ஆளுபவர்களும் இயற்கையை போற்றி பாதுகாக்கும் விதமாக விழாக்களை எடுத்திட வேண்டும். இவை செயல்பாடுகளினால் இயற்கையும் குளிர்ந்து உயிர்பலி மிகாது அகன்று ஓடும்.

ஆளுமை அதிகாரத்தில் உள்ளோர்கள் மக்களின் வாழ்வாதாரத்தை காக்கும் விதமாக திட்டங்களை தீட்டி அவற்றை தளராமல் நிறைவேற்றி **செயல்படி** தடைகள் ஏதும் இல்லாமல் தேசம் வளர்ச்சி அடையும் தெய்வபலமும் பெருகி இந்திய தேசத்தின் பொருளாதார வலிமையும் பெருகி மக்கள் வறுமை நிலையை கடந்து மேல் நிலை அடைந்து இயற்கையின் ஆசியும் பெருகிட இயற்கை பேரிடர்களில் இருந்து மீண்டு மேன்மை அடையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–